செ.வெ.எண்.82 நாள்:11.02.2018

## தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப் - 4 தேர்வில் திருநெல்வேலி மாவட்டத்தில் 1,03,636 நபர்களில் 85 சதவீத நபர்கள் தேர்வு எழுதினார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

----

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் இன்று (11.02.2018) நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (Group – IV) அடங்கிய பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வுகள் திருநெல்வேலி மாவட்டத்தில் 16 தேர்வு மையங்களில் 322 கல்வி நிலையங்களில் (371 Halls) நடைபெற்று வருகிறது. மேற்படி தேர்வினை 1,03,636 நபர்களில் 88,217 நபர்கள் தேர்வு எழுதிகின்றனர். இதில் 15,419 நபர்கள் தேர்வு எழுதவில்லை 85 சதவீத நபர்கள் தேர்வு எழுதி வருகின்றனர். இத்தேர்வினை கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் 23 பறக்கும்படை அலுவலர்களும், வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் நிலையில் 63 சுற்றுக்குழு அலுவலர்களும், உதவியாளர் நிலையில் 371 ஆய்வுப்பணி அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று தேர்வு நடைபெறும் மையங்களில் தடைபடாத மின்சாரம் வழங்கவும், குடிநீர், கழிப்பறை வசதி மற்றும் தேர்வு மையங்களுக்கு போதிய பேருந்து வசதிகளும், செய்ய மாவட்ட நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையங்களுக்கு போதிய பாதுகாப்பு மற்றும் தேர்வுத்தாள் துப்பாக்கி ஏந்திய காவர்கள் மூலம் எடுத்து செல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக பாளையங்கோட்டை தூய யோவன் மேல்நிலைப்பள்ளி, தூய யோவன் கல்லூரி மற்றும் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி உள்ள தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.